# சிறிமா பண்டாரநாயக்கா புதிய பிரதமர் ஆகிறார்

Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 12
இதழ்: 107
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் வைகாசி 15 ரபி. அவ் 22 வெள்ளிக்கிழமை [29-5-70]

எவர் பிறைற் நீல சோப்
அதிர்ஷ்டலாபத் திட்டம்

100 எவர் பிறைற் சோப் (கிழியாத) உறைகளை அல்லது 10 பிறேமா லோட்டஸ் தேயிலை பக்கற் (2 அவு) உறைகளை அல்லது இரண்டும் சேர்ந்து 100 உறைகளை சேர்த்து அனுப்புங்கள் நாம் அவற்றைக் குலுக்கி அதிர்ஷ்டசாலிகளுக்கு பரிசுகள் வழங்குவோம் பரிசு பெற்ற அதிஷ்டசாலிகளின் பெயர்கள் 'ஈழநாடு' பத்திரிகையில் வெளியிடப்படும்.

பரிசுகள் பின்வருமாறு:-
() றலி சைக்கிள் (2) டேபிள் பான்
(3) கைக் கடிகாரம்
மற்றும் 50 ஆறுதல் பரிசுகள்
முடிவுத் திகதி 31-7-70
பிறேமா தொழிற்சாலை, பருத்தித்துறை.




புதிய முறையில் நல்ல தரத்தில் தயாரித்து வெளியிடும் எவர் பிறைற் சோப்பைப் பாவியுங்கள்.
பிறேமா தொழிற்சாலை, பருத்தித்துறை

## கூட்டணிக்கு மிகப்பெரும்பான்மை பலம்

# எவரின் ஆதரவுமின்றி சிறிமா ஆட்சி அமைக்க முடியும்

### 11 மந்திரிகள் வீழ்ச்சி; நாகா, அமிர், ஜி.ஜி. தோல்வி

இரு தொகுதிகளிலும் ஆர்.ஜி. மண்கவ்வினர்

(நமது நிருபர்கள்)

எவரது உதவியுமில்லாமலேயே அரசாங்கம் அமைக்கக் கூடிய பூரண பெரும்பான்மைப் பலத்தை திருமதி சிறிமா பண்டாரநாயகா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நேற்று நடந்த பொதுத்தேர்தலில் பெற்றிருக்கிறது. சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சிகளுடன் சேர்ந்து சுதந்திரக்கட்சிக்கு ஆட்சிமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு.

## சிறிமாவுக்கு மகதேசாதிபதி அழைப்பு

கோட்டை, வெள்ளி

பொதுத்தேர்தலில் அமோக வெற்றி பெற்றுள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர் திருமதி பண்டாரநாயக்கா புதிய அரசாங்கம் அமைப்பது சம்பந்தமாக தம்மைவந்து சந்திக்கும்படி மகாதேசாதிபதி அழைத்திருப்பதாக கடைசியாகக் செய்தி கிடைத்தது. திருமதி பண்டாரநாயக்காதமது கட்சித்தலைவர்களுடன் தற்பொழுது அத்தனகலையில் ஆலோசனை நடத்துகிறார்.

## என்.எம்., பேர்னுட் மந்திரிகளாகும் அறிகுறி

கொழும்பு, வியாழன்

பொதுத் தேர்தலில் ஐக்கிய தேயக்கட்சிபடுதோல்வியடைந்துவிட்டதால் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா இன்றிரவுக்குள் கவர்னர்ஜெனரலை சந்தித்து தமது ராஜினுமாவை சமர்ப்பிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

திரு டட்லி சேனநாயக்கா தமது மந்திரிசபையின் ராஜினுமாவைச் சமர்ப்பித்த பின்னர் கவனர் ஜெனரல் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவை அழைத்து அரசாங்கம் அமைக்கும்படி கேட்டுக்கொள்வாரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

திருமதி சிறிமா அமைக்கவிருக்கும் புதிய மந்திரிசபையில் கூட்டணித் தலைவர்களான டாக்டர் என் எம் பெரேராவும், பீட்டர் கெனமன் ஆகியவர்களும் இடம் பெறுவார்களென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அறுதிப்பெரும்பான்மைப் பலம் பெற்றிருந்தபோதிலும் சமசமாஜக்கட்சி கம்யூனிஸ்ட்கட்சிகளுடன் செய்து கொண்ட தேர்தல் ஒப்பந்தங்களின்படி அக்கட்சித் தலைவர்களுக்கும் மந்திரி சபையில் இடம் கிடைக்கும் என்று கருதப்படுகின்றது.

திருமதி சிறிமாவின் மந்திரி சபையில் டாக்டர் என் எம். பெரேராவுக்கு திட்ட அமைச்சு கிடைக்கலாம் என்றும் திரு பெர்னுட் சொய்யாவுக்கு நிதி அமைச்சுக்கொடுக்கப்படலாமென்றும் கூறப்படுகின்றது. கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் திரு பீட்டர் கெனமன் மந்திரிப்பதவியொன்றை ஏற்றுக்கொள்ள இணங்கியிருப்பதாகவும் தெரிகின்றது

## தேர்தல் கடமைக்கு சென்றவர் விபத்தில் பலி

கொழும்பு, புதன்

தேர்தல் கடமையாற்றுவதற்காக கொழும்பிலிருந்து கேகாலைக்குச்சென்றுகொண்டிருந்த பொதுமராமத்து இலாகாவைச்சேர்ந்த வரைவாளர் திரு. நடராசா விபத்தில் சிக்கி காலமானர் அன்னருடைய சடலத்தை நேற்று யாழ்ப்பாணத்துக்கு தேர்தல் கமிஷனர் விசேஷமரியாதைகளுடன் அனுப்பி வைத்தார்.

## மக்கள் தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திரக்கட்சிக்கு ஆட்சிமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு.

**பொதுவாக அமைதியாக நடந்த நேற்றைய வாக்களிப்பின்போது சுமார் ஐம்பத்தைந்து லட்சம் வாக்காளர்களைக் கொண்ட இந்த நாட்டில் 85 சதவீதமான வாக்காளர் தமது வாக்குகளை உபயோகித்திருந்தனர்.**

**கலைக்கப்பட்ட ஆட்சிமன்றத்தின் சபாநாயகராகவிருந்த திரு. ஷேர்லி கொரியாவும், உபசபாநாயகராக இருந்த திரு. எம். சிவசிதம்பரமும் கமிட்டிகளின் தலைவராகவிருந்த பாக்கீர் மாக்காரும் தோல்வியடைந்தனர்.**

இலங்கையின் ஏழாவது ஆட்சிமன்றத்துக்காக நேற்று நடைபெற்ற பொதுத் தேர்தலில் அடுத்த ஐந்து வருடகாலத்துக்கு நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கையில் ஒப்படைப்பதென மக்கள் தீர்ப்பளித்துள்ளனர். இத்தேர்தல் சென்ற ஐந்துவருடகாலம் ஆட்சிசெய்த திரு. டட்லி சேனநாயக்காவின் ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

# அமைச்சர்கள் பலர் தோல்வி

திரு. டட்லியின் தலைமையிலான தேசிய அரசாங்கத்தில் முக்கிய அமைச்சர்களாக இருந்த நிதிமந்திரி யூ. பி. வன்னிநாயகா, கல்வி மந்திரி ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்ல, உணவு மந்திரி, எம். டி. பண்டா, காணி நீர்ப்பாசன மந்திரி திரு. சி. பி. டி. சில்வா, போக்குவரத்து மந்திரி திரு. ஈ. எல். பி. ஹுருள்ள கைத்தொழில் கடற்றொழில் மந்திரி திரு. பிலிப் குணவர்த்தன, மராமத்து மந்திரி மொண்டேகு ஜெயவிக்ரம, சமூகசேவை மந்திரி அசோக கருணரத்தின தொழில் அமைச்சர் எம். எச் முகம்மது, வர்த்தக மந்திரி ஹியு பெர்னாண்டோ விஞ்ஞானத்துறை மந்திரி எம்.டி எச். ஜயவர்தன ஆகியோர் இத்தேர்தலில் தோல்வியடைந்தனர்.

### ஒரே பார்வையில் கட்சிகள் நிலை

| கட்சிகள் | போட்டியிடும் ஸ்தானங்கள் | வெற்றி பெற்ற ஸ்தானங்கள் |
|---|---|---|
| ஐ. தே. கட்சி | 128 | 17 |
| ஸ்ரீ ல. சு. கட்சி | 106 | 90 |
| ல. ச. ச. க | 22 | 19 |
| தமிழரசுக்கட்சி | 19 | 12 |
| தமிழ்காங்கிரஸ் | 12 | 3 |
| கம்யூ. கட்சி (மாஸ்கோ) | 9 | 6 |
| எம். ஈ. பி. | 4 | 0 |
| சுயேச்சை | 136 | 1 |

### உதவி மந்திரிகளும் தோல்வி

உதவி மந்திரிகள் காப்டன் ஸி. ஜே. செனிவிரத்தின, பி. ஸி. இம்புலான,

திருமதி விமலா கன்னங்கரா திரு. எஸ் டி எஸ் ஜெயசிங்கா ஆகியோரும் தோல்வியடைந்தனர். திரு. ஹெல்டன் ஜயசிங்காவும் தோல்வியடைந்தார்.

### தலைவர்களுக்கும் ஆபத்து

தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி ஜி பொன்னம்பலம் யாழ்ப்பாணத் தொகுதியில் தோல்வியடைந்தார். பட்டிருப்பில் இப்போதைய தலைவர் திரு எஸ் எம் இராசமாணிக்கமும் வட்டுக்கோட்டைத் தொகுதியில் தமிழரசுக் கட்சிச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கமும் தோல்வியடைந்தனர். தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணித் தலைவர் திரு. தா. சிவசிதம்பரம் வவுனியாவில் தமிழரசு அபேட்சகரிடம் தோல்வியடைந்திருக்கிறார். மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் திரு. பிலிப் குணவர்த்தனவும் தோல்வியடைந்திருக்கிறார்.

### கட்டுப்பணத்தினால் லாபம்

இத்தேர்தலில் தேர்தல் கமிஷனரால் அங்கீகரிக்கப்படாத கட்சிகளில் ஒன்றான திரு. ஆர். ஜி. சேனநாயகாவின் தலைமையிலான சிங்கள மகாஜனக் கட்சியின் சார்பில் சுயேச்சைகளாகப் போட்டியிட்ட 51 பேரும் கட்டுப்பணம் இழந்தனர். மொத்தம் 81 சுயேச்சைகள் போட்டியிட்ட இத்தேர்தலில், தொண்ணூற்றொன்பது வீதமானது சுயேச்சையாளர் வெற்றி பெறவில்லை.

### மூன்றுக்கு மூன்று

வடபகுதியில் யாழ்ப்பாணம், உடுப்பிட்டி, வவுனியா ஆகிய தொகுதிகளைத் தமிழரசுக் கட்சியிடம் பறிகொடுத்த தமிழ்க்காங்கிரஸ், தமிழரசுக் கட்சியிடமிருந்து நல்லூர், வட்டுக்கோட்டை, கிளிநொச்சி ஆகிய மூன்று தொகுதிகளையும் தனதாக்கிக் கொண்டிருக்கிறது.

(4-ம்பக்கம்பார்க்க)



நாட்டை ஆளும் பொறுப்பை மீண்டும் மக்கள், திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் கைகளில் ஒப்படைக்க முடிவு செய்து விட்டார்கள். இன்று பெற்றுள்ள வெற்றி இந்த நாட்டின் தாய்க்குலத்துக்கு கிடைத்த வெற்றியாகும். ஒரு குடும்பத்தைச் சேர்ந்த அனைவரையும் அரவணைத்துக் கொண்டுபோகும் குடும்ப தலைவியின் நிலையில் இந்த நாட்டில்வாழும் பல்வேறு இன மக்களையும் ஒருதாயின் நிலையில் அவர் அன்புடனும் பண்புடனும் வழிநடத்துவார் என்று எதிர்பார்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கம்போடியாவுக்கு ஆயுத உதவி

நியூயோர்க், மே 29

அமெரிக்கா மேலும் ஆயுதங்களைக் கம்போடியாவுக்குக் கொடுக்கவிருக்கின்றது என நேற்று ஜனதிபதி நிக்ஸன் அறிவித்தார்.

யூன்மாதம் 30ம் திகதிக்கிடையில் 70 லட்சம் பெறுமதியாக நவீன ஆயுதங்கள் வழங்க இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது

நேட்டோ தலைமைக் காரியதரிசிக்கு ஜனதிபதி நிக்சன் எழுதியுள்ள கடிதத்தில் கம்போடியா வில் வியட்கொங்கியற்கு எதிராக தாம் அடைந்த வெற்றி பெற்ற விபரங்களை விளக்கியுள்ளார்:

நேற்று இந்தோனேஷிய ஜனதிபதி சுகாட்டோ வெளிவிவகாரமந்திரி ஆதம் மாலிக்ஆகியோருடன் தென்கிழக்கு ஆசிய நிலைபற்றி நீண்ட நேரம் பேச்சுவார்த்தை திரு. நிக்சன் நடத்தினர்.

அரசாங்கக் கேள்விகள்
நீர்ப்பாசனத் திணைக்களம்

என் 1790 - நீர்ப்பாசன இலாகாவின் வவனியா உப பிரிவிலுள்ள முல்லைத்தீவு சின்னறு அணைக்கட்டு செய்கரைப் பாதைக் கட்டு வேலைக்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

விபரங்களுக்கு 29-5-70 தேதியிடப்பட்ட இலங்கை வர்த்தமான பத்திரிகையின் பகுதி 1 தொகுதி 11 ஐப் பார்க்கவும். GP 2893

## வரி விளம்பரம்

உலக நண்பர்கள்

மொரிசியஸ், பீஜி, இந்தோனேசியா முகவரிகளடங்கிய 500 உலகத்தோழர் தோழியரின் முகவரிகளுடன் புதிய "உலக நண்பர்கள்" பெற ரூபா 1/50 அனுப்புக. தர்மலிங்கர், 43, நுவரெலியா வீதி, வெளிமடை. 2260

### கண்டெடுத்த பொருள்

ஆனைக்கோட்டை- வட்டுக்கோட்டை ரேட்டில் தறப்பாள் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. அதற்குரியவர் தகுந்த அத்தாட்சியுடன் நவாலி உப தபாலதிபரிடம் பெற்றுக்கொள்ளலாம் 2261

### வாடகைக்கு

வீடு

காங்கேசன்துறை வீதி 4 3/4 கட்டைக்கு முன்பதாக இராமநாதன் பெண் பாடசாலைக்கு அருகாமையில் சகல வசதியுடன் வாடகைக்கு விடப்படும். இராசரத்தினம், சிவஞானகிரி, இணுவில் 2259

கொழும்பில் நடைபெற்ற மாபெரும் உதைபந்தாட்டம்

# இங்கிலாந்து வெற்றியீட்டியது; இலங்கை புகழை ஈட்டியது

— நமது விளையாட்டு நிருபர் தேவா —

கொழும்பு, வியா.

உலகப்புகழ் வாய்ந்த 'சதாம்டன்' (செயின்ஸ்) உதைபந்தாட்டக் கோஷ்டி, இலங்கையில் கலந்து கொண்ட இரு போட்டிகளிலும் வெற்றி வாகை சூடியுள்ளது.

இலங்கை 'சதாம்டன்' கோஷ்டியுடன் மோதும் போது வெற்றியைக் குறிக்கோளாகக் கொள்ளாமல் மோதியதாலேயே தோல்வி அடைந்தது எனக் கூறலாம் உலகப் புகழ் வாய்ந்த இங்கிலாந்துக் கோஷ்டியுடன், நாம் மோதும் போது நிச்சயம் தோல்வியே அடைவோம் என்ற எண்ணம் ஒவ்வொரு இலங்கை வீரர்களின் மனதிலும் ஏற்கனவே குடிகொண்டு விட்டதினலேயே இலங்கைக்கோஷ்டி இரு போட்டிகளிலும் தோல்வி அடைந்தது.

முதல் போட்டியில் 'சதாம்டன்' கோஷ்டியினர் இலகுவாகவே பந்தைக் கொண்டு சென்று இலங்கையின் கோல்வாயினுள் புகுத்திய வண்ணமே இருந்தனர். இவர்கள் இடைவேளையின் முன்னமே நாலு கோல்களைப் போட்டு விட்டனர். இடைவேளையின் பின்னும் இக்கோஷ்டியினர் மேலும் இரு கோல்களைப் போட்டு ஆட்ட இறுதியில் 6—0 கோல்களால் இலங்கைக் கோஷ்டியைத் தோற்கடித்தனர். இந்தப் போட்டியில் இலங்கைக் கோஷ்டியினர் தடுமாற்றத்துடன் விளையாடியதினலேயே, இங்கிலாந்துக் கோஷ்டியினரின் சாதுரிய விளையாட்டையும், வேகமாகப் பந்தை ஒருவரிடமிருந்து ஒருவருக்கு பரிமாறுவதையும், ரசிகர்கள் கூடுதலாக காணமுடியவில்லை.

இரண்டாம் நாள் 'மின்னொளியில்' நடைபெற்ற போட்டியை, இலங்கையின் உதைபந்தாட்டச் சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டுமென உதைபந்தாட்ட அவதானிகள் கூறிஞர்கள். இதற்கு முன்னர் இலங்கைக் கோஷ்டியினர் இது போன்ற மிகக் கடுமையான தாக்குதலைச் சமாளித்து, தரமான ஆட்டத்தை ஆடிக் காட்டியது இல்லை எனக் கூறபபடுகிறது.

முதல் நாள் போட்டியை பார்த்து சலிப்படைந்த ரசிகர்களைப் பரவசத்திலும், உற்சாகத்திலும் மூழ்கடித்தது மட்டுமன்றி, இலங்கையில் உதைபந்தாட்டத்தின் தரம் எவ்வளவுக்கு உயர்ந்திருக்கின்றது என்பதை இங்கிலாந்து வீரர்களுக்கும் தெரியப்படுத்திஞர்கள்.

இந்தப் போட்டி ஆரம்பமாகி முடிவடையும்வரை 'சதாம்டன்' கோஷ்டியினரே மிகக் கூடுதலாக பந்தை தமது கால்களில் வைத்திருந்த போதிலும் மிக இலகுவாகக் கோல்களைப் போட முடியாதபடி இலங்கைக் கோஷ்டியினர், பின்னணியில் நின்று விளையாடித் தடுத்தவண்ணமே இருந்தனர்.

இங்கிலாந்துக் கோஷ்டியினர் மின்னல் வேகத்தில் பந்தை பரிமாறும் போது 'குறவனின் மகுடிக்கு கட்டுண்ட நாகம் போல்' இவர்களின் கால்களில் பந்து கட்டுண்டு இருந்ததைக் கண்ணுற்ற ரசிகர் கூட்டம் பெரும் ஆச்சரியத்தில் மூழ்கியது. இங்கிலாந்து கோஷ்டி வீரர்களின் கால்களில் கட்டுண்டிருந்த பந்து, இலங்கைக் கோஷ்டியின் கோல் வாயினுக்குள் போவதற்கு மட்டும் மறுத்து விட்டது. இதற்குக் காரணம். இலங்கை கோஷ்டியின் கோல்காப்பு வீரர் லயனல் பீரிஸ் என்று துணிந்து கூறலாம்.

இங்கிலாந்து வீரர்கள், தங்களுக்கு இலங்கை வீரர்கள் கடுமையான போட்டியை அளிப்பார்கள் என எதிர்பாராததிஞல், இந்த இரண்டாம் நாள் போட்டியில் சற்று ஆவேசம் கொண்டு எமது வீரர்களைத் தாக்கிஞர்கள். இதஞல் இவர்கள் பலமுறை மத்தியஸ்தரின் கண்டிப்புக்கு ஆளாகிஞர்கள்.

இங்கிலாந்துக் கோஷ்டியின் வீரரான றொன்டேவிட் பந்தைத் தலையால் அடித்துக் கோலாக்குவதில் உலகப்பிரசித்தி பெற்றவர். யின் முன் பந்தை தரையில் வைத்து பரிமாறி விளையாடி கோல்போட முடியாததை உணர்ந்த இவர்கள் இடைவேளையின்பின் பந்தை அந்தரத்தில் வைத்து ஒருவரிடம் ஒருவர் பரிமாறிவிளையாட முற்பட்டதிஞல்அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டனர். இந்தப் புதிய பாணியில் விளையாடியஇவர்கள் ரசிகர்களின் பலத்த கரகோஷத்தைப் பெற்றனர். இந்த ஆட்டம் முடிவடைவதற்கு 20 நிமிடங்கள் இருக்கும்போது பலத்த மழை தொடர்ந்து பெய்த போதிலும் ஆட்டம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்தது. 25 ஆயிரத்துக்கு மேற்பட்ட ரசிகர்கள் கூட்டமும் நனைந்த வண்ணம் ஆட்டத்தை ரசித்துக் கொண்டிருந்தனர். இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கைக் கோஷ்டியின் வீரர் பெர்ணண்டோ திடீரென ஒரு கோலைப் போட்டார். இதைச் சற்றும் எதிர்பாராத இங்கிலாந்துக் கோஷ்டியினர் இதன்பின் மிக ஆவேஷத்துடன் விளையாடி முன்னேறிய போதிலும் இலங்கைக் கோஷ்டியின் பின்னணி வீரர்கள் மிக சாமர்த்தியமாக முறியடித்தனர்.

ஒரு கட்டத்தில் இலங்கைக் கோஷ்டியின் பின்னணி வீரர் ஒருவர் முறை தவறிவிளையாடியதால் அவர் உடனடியாக மத்தியஸ்தரால் மைதானத்தை விட்டு வெளியேற்றப்பட்டார் இதைக் கண்ணுற்ற இங்கிலாந்துக் கோஷ்டியின் காப்டன் மத்தியஸ்தரை அணுகி அந்த வீரரை மன்னித்து விளையாட அனுமதிக்கும்படி கோரிஞர், இதை மத்தியஸ்தர் ஏற்க மறுக்கவே இங்கிலாந்துக் கோஷ்டியின் வீரர்கள் அனைவரும் மத்தியஸ்தரை ஆட்சேபித்து மைதானத்தின் மத்தியில் நின்று கரகோஷம் செய்தனர், இதைக் கண்ணுற்ற மத்தியஸ்தர் நிலைமையைச் சமாளிக்க உடனடியாக வெளியேற்றிய இலங்கை வீரரை மீண்டும் ஆடவரும்படி அழைத்தார். இதன் பின்னர்தான் மீண்டும் ஆட்டம் தொடர்ந்து நடைபெற்றது. இதைக் கண்ணுற்ற ரசிகர் கூட்டம் இங்கிலாந்துக் கோஷ்டியினரின் பண்பினை பாராட்டிப் பெருத்த கரகோஷம் செய்தனர்.

ஆட்ட முடிவில்இங்கிலாந்துக்கோஷ்டி 2--1 கோல்களால் வெற்றி பெற்றது.

## இன்றைய பலன்

வைகாசி மாதம் 15ம் திகதி 29-5-70

**மேஷம்**- சுற்றுவட்டாரத்தில் சூழ்ச்சிகள் உருவாகும். சிறுபிணிகளுக்கும் இடமுண்டு, வாய்வுப் பதார்த்தங்களைதத்விர்ப்பதுடன் தெய்வ நம்பிக்கை நன்மை தரும்,

**ரிஷபம்**- இதயத்தைத் தொடும் சம்பவங்கள் இடம் பெறும், சிலருக்குப் புதிய வாகனத்தில் முதலீடு செய்யும் சந்தர்ப்பம் ஏற்படலாம்.

**மிதுனம்**-இதயத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கும் இனசனம் கூடுவர், புத்திர சுகத்துடன் தொழில்துறையில் வெற்றியும் கிடைக்கும்.

**கடகம்**- வெற்றிகள் இடம்பெறலாம், நிலையும் தடுமாறும்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளி29—5—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ. அன்ட் 61 மீ.**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 பண்ணுரின் தமிழ், 7-45 நினைவுகள், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவு, 8-15 இஸ்லாமிய கீதங்கள், 8-30 திரை கானம்.

# வடக்கு, கிழக்கு, தெற்கில் 3 பல்கலைக் கழகங்கள்

# தாய்மொழியே போதனமொழி

## சிறிமாவின் எதிர்காலத்திட்டம்

கோட்டை, வியாழன்

**தேர்தல் முடிவுகளின்படி திருமதி பண்டாரநாயக்காவின் தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிப் பொறுப்புக்குவரும் என்பது உறுதியாகிவிட்டது. சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளவிருக்கும் வேலைத்திட்டம் அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தரப்பட்டுள்ளது. அதன் சுருக்கம் வருமாறு**

மீன்பிடித்தொழில் துரிதமாக யந்திரமயமாக்கப்படுவதுடன், நாட்டைமீன் தேவையில் தன்னிறைவு பெறச்செய்யும் வகையில் பிரதானமானதோர் தொழில் துறையாகவிருத்தி செய்யப்படும்.

தனியார்துறை உடைமையை இலங்கையர் மயமாக்கும் கொள்கை தீவிரமாக அமுல்படுத்தப்படும்.

அந்நிய உள்நாட்டுக் கம்பனிகளில் அரசாங்கம் பங்குகள் பெறுவதற்கான சட்டங்கள் செய்யப்படும்.

### கூட்டுறவுகள்

நாட்டில் நாட்டுப்புற அபிவிருத்தியில் கூட்டுறவுஇயக்கம் பிரதான பாத்திரம் வகிக்கும். கூட்டுறவுகளை பெரிய அளவிலும் பொருளாதார ரீதியாகக் கூடுதல்வலுவுள்ள இணைப்புகளாகவும் நாம் புனரமைப்போம் கூட்டுறவு ஊழியர்களுக்கு சம்பள விகிதப்பிரகாரம் இடமாற்று சேவையை ஸ்தாபிப்போம். இவர்களுக்கு நாம் தொழில் உத்தரவாதத்தை அளிப்போம்.

மகாவலிகங்கை திசை திருப்புத்திட்டத்தின் முதல் கட்டத்தை நிறைவேற்றுவதற்காக யூ. என். பி. அரசாங்கம் உலகவங்கியுடனும் ஐடிஏ உடனும் செய்து கொண்டுள்ள ஒப்பந்தங்களும் இத்திட்டத்தை நிர்வகிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள சபையின் அமைவும் அதிகாரங்களும் மீண்டும் பரிசீலிக்கப்படும்.

ஏனைய நதிகளையும் பயன்படுத்தவும், மற்றும் பள்ளத்தாக்குகளை விருத்தி செய்யவும் திட்டங்கள்மேற்கொள்ளப்படும்.

போன்ற குடிசைத்தொழில்களிலும்தொழிலாளர்கள் சுரண்டப்படுவது குறிப்பாகப் பெண் தொழிலாளர்கள் சுரண்டப்படுவது ஒழிக்கப்படும்.

எல்லா ஒழுங்கீனங்களையும் அகற்றும் நோக்குடன் 1965 மார்ச்மாதத்திற்குப் பின்னர் பொதுத்துறையில் செய்யப்பட்ட நியமனங்கள் புனராய்வு செய்யப்படும்

தோட்டங்களில் வாழும் தமது உறுப்பினர்களைச் சந்திக்கவும், கூட்டங்கள் நடத்தவும் தோட்டங்களுக்குள் பிரவேசிக்க தொழிற்சங்க ஊழியர்களுக்கு உரிமைவழங்கப்படும்.

நாட்டின் இனத்தொகையில் அரைவாசிக்கும் அதிகமாக உள்ள வாலிபர்களின் பிரச்சினைகள்விசேஷகவனத்தைப் பெறும். இந்தப் பணியை வழிநடத்தவாலிபர் விவகார சேமநலத் திணைக்களம் நிறுவப்படும்.

குழந்தைகளின் மதிய போசனத்தின் தரம் உயர்த்தப்படும்.

### உயர்கல்விச் சட்டம்

சுயபாஷைகளே போதனமொழியாக இருக்கும் ஆங்கிலம் கற்பதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்படும், தோட்டப் பாடசாலைகள் எடுக்கப்பட்டு தேசீய கல்வி அமைப்பில் இணைத்துக் கொள்ளப்படும்,

யூ என் பி அரசாங்கத்தின்கீழ் கொண்டுவரப்பட்ட உயர்கல்விச் சட்டம் ரத்துச் செய்யப்படும், முழுநேர உறுப்பினர்களுடன் கூடிய சர்வகலாசாலை கிராண்ட் கமிஷன் ஸ்தாபிக்கப்படும். பூரண கல்விச் சுதந்திரம் வழங்கப்படும்.

மொழியாக சிங்களத்திற்குள்ள ஸ்தானத்திற்கு குழிபறிக்கவும் ஆங்கிலத்தை அது அகற்றப்பட்ட நிலைக்கு மீண்டும் உயர்த்தவும் பல்வேறு வழிகளில்முயன்றுள்ளது.

அரசகரும மொழிச் சட்டத்தையும் தமிழ்மொழி விசேட விதி சட்டத்தையும் நாம் பூரணமாகவும் நியாயமான முறையிலும் அமுல்படுத்துவோம் நீதிமன்றங்களில் வேலைகளிலும் உயர் கல்வியிலும் உத்தியோக மொழிக்கொள்கை அமுல் நடத்தப்படும்

### குடியரசு

எமது அரசியல் சட்டம் ஒரு சோஷலிஸ ஜனநாயகத்தின் நோக்கங்களை ஈட்ட உறுதிபூண்ட ஒரு சுதந்திர சுயாதீயபத்திய சுயாதீனக் குடியரசாக இலங்கை பிரகடனப்படுத்தும், சகல மக்களினதும் அடிப்படை உரிமைகளையும் சுதந்திரங்களையும் இது உத்தரவாதப்படுத்தும்

### நிர்வாகம்

நிர்வாக அமைப்பை முற்ருக மாற்றியமைப்போம். அதைக் கூடுதல் ஜனநாயகமுடையதாக்குவோம். பின்வரும் முறையில் அதை மக்களுடன் மிக நெருக்கமாக இணைப்போம்

1 தேர்ந்தெடுக்கப்படும் சபைகள்

2 அரசாங்க அலுவலங்களில் ஆலோசனை கமிட்டிகள்

3 பிராந்திய அடிப்படையில் மக்கள் கமிட்டிகள்

இதன் மூலம் நிர்வாக அமைப்பு நாட்டினது தேவைகளுக்கும் மக்கள் விருப்பங்களுக்கும் கூடுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக்கு அருகாமையில் சகல வசதியுடன் வாடகைக்கு விடப்படும். இராசரத்தினம், சிவஞானகிரி, இணுவில் 2259

வேண்டுமென உதைபந்தாட்ட அவதானிகள் கூறினார்கள். இதற்கு முன்னர் இலங்கைக் கோஷ்டியினர் இது போன்ற மிகக் கடுமையான [illegible]க்கு ஆளாகினார்கள்.

இங்கிலாந்துக் கோஷ்டியின் வீரரான ரொன்டேவிட் பந்தைத் தலையால் அடித்துக் கோலாக்குவதில் உலகப்பிரசித்தி பெற்றவர். வீரர் ரெறிபெயின், இவர் கடந்த உலக உதைபந்தாட்டப் போட்டியில் இங்கிலாந்துக் கோஷ்டியின் சார்பில் கலந்து கொண்டவர். இந்த இரு வீரர்களும் இரண்டாம் நாள் போட்டியில் தாம்கற்றுக்கொண்ட உதைபந்தாட்ட சாகசங்கள் அனைத்தையும் வெளிக்காட்டி வெற்றிகரமாக பந்தைமுன்னேற்றிய போதிலும் அவை அனைத்தையும் இலங்கைக் கோஷ்டியின் கோல்காப்பு வீரர் லயனல் பீரிஸ் மிகச் சாதுரியமாக முறியடித்த வண்ணமே இருந்தார்.

இடைவேளைவரை இங்கிலாந்துக் கோஷ்டியினரால் கோல்கள் எதையும் போட முடியவில்லை. இடைவேளை

...

செல்வம் பொங்கும் இனசனம் கூடுவர், புத்திர சுகத்துடன் தொழில்துறையில் வெற்றியும் கிடைக்கும்

**கடகம்**- தவறுகள் நடக்கலாம், நிலையும் தடுமாறும். நண்பர்கள் காலைவாரிவிடக்கூடும், சிலருக்கு அந்நிய வாசம் ஏற்படலாம்.

**சிம்மம்**- இவ்வாரத்தில் இனிமை தவழும் வெளியிடத் தொடர்புகள் பெருகும் இனசனங்களின் உதவியுடன் செல்வாக்கும் உயரும்

**கன்னி**- புதிய தலையிடிதலை தூக்கும், வணிகர்கள் வாழ்க்கை சோதனை நிறைந்ததாக இருக்கும், மாணவர்கள் உணர்ச்சி வசப்படாது இருக்கவும்

**துலாம்**- தெளிந்த மனம் தெய்வ குருபக்தியுடன் தேடியதும் கிடைக்கும், பரோபகாரச் சிந்தை, வளரும், பொதுப்பணியை நாடுவீர்.

**விருச்சிகம்**- புதியவேலை வாய்ப்புக்கள் கிடைக்கும், சந்தர்ப்பத்தை பயன் படுத்தினால் இன்று துரித முன்னேற்றம் கிடைக்கும். சிலருக்கு அதிஷ்ட லாபமுண்டு.

**தனுசு** பலகாலம் எதிர் பார்த்திருந்த பதவி உயர்வுக்கு வழிகோலப்படும். சிலருக்குப்புதிதாகத் தொழில் கிடைக்கக்கூடும்; வருவாயும் வளரும்,

**மகரம்**- பல வழிகளிலும் பணம் செலவாகும், நண்பர்கள் சகவாசத்தால் சிக்கல்களில் மாட்டிக் கொள்ள நேரிடலாம், நடுநிலமை நன்று.

**கும்பம்**- சுற்றுடலில் புதிய உற்சாகம் ஏற்படும், உள்ளத்தில்தோன்றும்உறுதி உங்களை முன்னணிக்குஅழைத்து செல்லும் கண்ணியமான தினம்

**மீனம்**- வீட்டில் சுபகருமங்கள் இடம்பெறும். பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில்இணைவர், கைத் தொழில் புரிபவர்களுக்கு நல்ல வருவாய் உண்டு,

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

...பனையின் தமிழ், 7-45 நினைவுகள், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவு 8-15 இஸ்லாமிய கீதங்கள், 8-30 திரைகானம்.

**344 மீ. அன்ட் 49 மீ.**

12-00 செய்திச்சுருக்கம் 12-03 தொழிலாளர் கேட்டவை, 1-05 கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ. அன்ட் 61 மீ.**

மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-28 சங்கமம், 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-30 வளரும்பயிர்.

இரவு6-15இசைப்பயிற்சி, கள் 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 பாட்டு, 7-45செய்திச்சுருள், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 10-00 நாதசுரம், 10-30 செய்திச் சுருக்கம்.

— —

ரஷ்யாவின்

## மூத்த கிழவர்

மாஸ்கோ, மே.26

அஸர்பைஜானுவுள்ள லோரிக் கிராமத்து மக்கள் சோவியத் யூனியனின் மிக மூத்தவரான ஷிராலி மிஸ்லிமோவ்ன் 165 வது பிறந்த தினத்தை உற்சாகத்துடன் சமீபத்தில்கொண்டாடினர்.

குடியரசின் தலைநகரான பாகுவுக்கு மேற்கொண்ட விஜயமே இந்த வருடத்தில் தனது வாழ்வில் இடம் பெற்ற முக்கிய சம்பவம் என்று மிஸ்லிமோவ் கருதுகிறார். லெனின் நூற்றாண்டு வைபவங்களில் கலந்து கொள்ள இவர் அழைக்கப்பட்டார். அரசாங்கம் அளித்த 'உன்னத உழைப்பு' விருது இந்தமூத்த முழு கிழவர் பெரிதும் மகிழ்ச்சியடைந்துள்ளார்.

மிஸ்லிமோலின் குடும்பம் மிகப் பெரியது, இதில் இந்த ஆண்டில் 21 பூட்டப்பிள்ளைகளும், கொப்பாட்டப் பிள்ளைகளும் புதிதாகச் சேர்ந்து கொண்டனர். இவரது குடும்பத்தின் மொத்த எண்ணிக்கை 209.

ஒன்றரை நூற்றாண்டைக் கடந்து உயிர் வாழ்வில் உலக சாதனையை ஈட்டியுள்ள இவர் மிக உற்சாகத்துடன் உள்ளார். இவர் மீது நடத்தப்பட்ட சமீபத்திய வைத்தியப் பரிசோதனைகள் இதையே தெரிவித்துள்ளன. இவரது நாடித்துடிப்பு நிமிடத்திற்கு 82. இரத்த ஓட்ட அமுக்கம் 135-85 இந்த முதுகிழவர் தனது தோட்டத்தில் நாளாந்தம் வேலை செய்கிறார். இவர் நீண்ட தூரம் நடக்கிறார் இப்போது வைக்கோல் கட்டும் காலமானதால் இவரை வயல்களில் அடிக்கடி காணலாம். 'வாலிபர்கள் வேலை செய்வதைக் காண தான் விரும்புகிறேன்!' என்று இவர் கூறுகிறார்.

...டும் பரிசீலிக்கப்படும்.

ஏனைய நதிகளையும் பயன் படுத்தவும், மற்றும் பள்ளத்தாக்குகளை விருத்தி செய்யவும் திட்டங்கள்மேற் கொள்ளப்படும்.

முழுநாட்டையும்மின்சாரமயமாக்கும் திட்டம் அமுல்படுத்தப்படுவதுடன், தொழில்களுக்கும், வீட்டுப் பாவிப்புக்குமான மின்சாரக் கட்டணம் குறைக்கப்படும்.

### சமூகப்பாதுகாப்பும் சேம நலனும்

வயோதிபகால அனிகூலங்கள் உட்பட விரிவான சமூக காப்புறுதித்திட்டமும் தேசிய பென்ஷன் திட்டமும் அமுல் படுத்தப்படும்.

ஊழியர்களுக்குப்பொழுது போக்கு, ஓய்வுவசதிகளும், வயோதிபர்களுக்கும், வலுக்குறைந்தவர்கக்கும் அனாதரவானவர்களுக்கும் ஸ்தாபன ரீதியான பராமரிப்பும் அளிக்கப்படும்.

பொதுத் துறையிலுள்ள அனைத்துக்காலி இடங்களும் நிரப்பப்படும் நிர்வாக அமைப்பு சீர்திருத்தியமைக்கப்படுவது புதிய இலாகாக்களை ஸ்தாபிப்பதையும், மற்றும் நிர்வாக ஆற்றலை பயன்படுத்தக்கூடிய வாய்ப்புகளையும் உருவாக்கும்.

### வாழ்க்கைச் செலவு

பங்கீட்டரிசியில் யூ என் பி அரசாங்கம் வெட்டிக்குறைத்த ஒரு கொத்து அரிசியையும் மீண்டும் வழங்குவோம்,

### ஊழியர்கள்

முழுமையான தொழிலாளர் உரிமைச் சாசனம்அமுல்படுத்தப்படும் தொழிற்சட்டங்களைத் திருத்தியமைப்பது தொழில் உத்தரவாதச் சட்டம் சமவேலைக்குச் சம சம்பளம் வழங்கும் கொள்கையை அங்கீகரிப்பது போதனுமொழியை அடிப்படையாகக்கொண்ட பாகுபாடுகளை ஒழிப்பது, தொழிற் சங்கங்களை முதலாளிகள் கட்டாயமாக அங்கீகரிக்கச் செய்வது போனஸ் அனுகூலங்கள், ஊழியர்சேமலாப நிதிகொடுப்பவைகளை அதிகரிப்பது.

எழுது வினைஞர் பதவி வகுக்கும் நிர்வாகப் பிரிவுகளுக்கும் சுயபாஷைகளில் கல்வி கற்றவர்கள் நயமிக்கப்படுவதற்குத் தனியார் துறை காட்டும்எதிர்ப்பு முறியடிக்கப்படும்

கடும் உழைப்புத் தொழில்களிலும், பீடித்தொழில்

...பட்ட உயர்கல்விச் சட்டம் ரத்துச் செய்யப்படும், முழுநேர உறுப்பினர்களுடன் கூடிய சர்வகலாசாலை கிராண்ட் கமிஷன் ஸ்தாபிக்கப்படும். பூரண கல்விச் சுதந்திரம் வழங்கப்படும், ஆட்சிமன்றத்தின் பொறுப்பிற்குட்பட்டு சர்வகலாசாலைகள் சுயேட்சையாக இயங்குவது உத்தரவாதப் படுத்தப்படும்.

இப்போதுள்ள பல்கலைக் கழகங்களில் பொதுத்தரம் உயர்த்தப்படும் வடக்கிலும் தெற்கிலும் கிழக்கிலும் மூன்று சர்வகலாசாலைகள் ஸ்தாபிக்கப்படும். மேற்கத்திய வைத்தியத்துடன் ஆயுள்வேதம்சித்தம் யூனானி முறைகள்துரிதமாக விருத்தி செய்யப்படும்.

வாடகைக்கு விடப்பட்டுள்ள வீடுகளை வீட்டுடமையாளர்கள் திருத்தவும்பேணவுமான சட்டங்களும் கண்டிப்பாக அமுல் படுத்தப்படும். கட்டடங்கள் அனைத்தும்வாடகைச்சட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும்.

### மத சுதந்திரம்

பௌத்தத்திற்கு உரிய இடம் அளிக்கப்படும், அனைத்து மத விசுவாசிகளுக்கும் மதவழிபாட்டுச் சுதந்திரமும் தமது மதத்தை அனுஷ்டிக்கும் உரிமையும் உத்தரவாதமும் செய்யப்படும், தமது மதக் கோட்பாடுகளுக்கு ஏற்ற வாழ்க்கை நடத்துவதற்கு தேவையான பொருளாதார சமூக சூழ்நிலை உருவாக்கி அளிக்கப்படும்,

தேசிய நூலக அமைப்பையும் ஒரு தேசிய கலையரங்கையும், நாடக கலை, இசை நிறுவனங்களையும் கல்லூரிகளையும் நாம்அமைப்போம்,

தமது மொழிகளையும் கலாச்சாரங்களையும் வளர்க்க அனைத்து இனங்களுக்கும் உதவி வழங்கப்படும்,

அரசாங்க உதவிபெறும் தேசிய விளையாட்டுச் சபையும் மற்றும் விளையாட்டுக் கழகங்களும் உண்மையான வீரர்களுக்கு அதிகாரமளிக்கும் வகையில் திருத்தியமைக்கப் படும்.

### மொழி

உத்தியோகமொழிச் சட்டத்திலும் திரு பண்டாரநாயகா அரசாங்கத்தின் காலத்தில் அங்கீகரிக்கப்பட்ட தமிழ்மொழி விசேட விதி) சட்டத்தினதும் கட்டுக் கோப்புக்குள்ளேயே மொழிப் பிரச்னைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்பதை இப்போது எல்லாப் பிரதான அரசியல் கட்சிகளும் ஒப்புக்கொண்டுள்ளன ஆனால் இந்தச் சட்டங்களுக்கு உதட்டளவில் ஆதரவு தெரிவித்த யு என் பி நடைமுறையில் உத்தியோக

...3 பிராந்திய அடிப்படையில் மக்கள் கமிட்டிகள்

இதன் மூலம் நிர்வாக அமைப்பு நாட்டினது தேவைகளுக்கும் மக்கள் விருப்பங்களுக்கும் கூடுதல் பொறுப்புடையதாக்கப் படும்.

### அரசாங்க ஊழியர்கள்

அரசாங்க ஊழியர்களின் தொழிற்சங்க உரிமைகளில் இப்போதுள்ள சகல கட்டுப் பாடுகளும் அகற்றப்பட்டும்

நீதிபரிபாலனம், ஆயுதப் படைகள், பொலிஸ் ஆகியவற்றைச் சேர்ந்தவர்களும் பொதுக்கொள்கையை அமுல் படுத்துவதில் நிர்ணயிப்பு அதிகாரமுள்ளவர்களும் நீங்கலாக ஏனைய சகல பொதுஊழியருக்கும் பூரண அரசியல் உரிமைகள் வழங்கப் படும்

இன்றைய யூ என் பி அரசாங்கத்தின் அரசியல் வஞ்சத்திற்கு இலக்கான பொது ஊழியர்கள் அனைவரின் மீதான தண்டனைகளும் அகற்றப்படும்

### பொருளாதாரம்

சோஷலிஸசமுதாயத்தை நோக்கி முன்னேற்றிச் செல்வதற்கான அடித்தளம் இடும்வகையில் ஒரு தேசிய திட்டத்தின் பிரகாரம் பொருளாதாரத்தின் சகல கிளைகளையும் துரித கதியில் வளர்க்க நாம் முனைவோம்.

### வங்கிகள்

வங்கி அமைப்பு தேசிய மயமாக்கப்படும். கைத்தொழில், விவசாயம், வெளிநாட்டு வர்த்தகம், உள்நாட்டு வர்த்தகம் மற்றும் துறைகளின் வளர்ச்சிக்கு உதவ விசேஷ வங்கிகள் அமைக்கப்படும்.

அத்தியாவசியப் பொருட்களினதும் இறக்குமதியை அரசாங்கம் கையாளும்.

### சில்லறை வர்த்தகம்

சில்லறை வர்த்தகம் இலங்கையர்களான சில்லறை வர்த்தகர்களாலும், கூட்டுறவுக் கடைகளாலும் அரசாங்க கடைகளாலும் நடத்தப்படும்.

விநியோக அமைப்பில் இலங்கையர்களான சில்லறை வர்த்தகர்களுக்கு அவர்களுக்கு உரிய இடம் உத்தரவாதப்படுத்தப்படும்

### தோட்டங்கள்

நாட்டு நலனுக்கேற்பத் தோட்டத் தொழிலுக்கு வழிகாட்டவும், அதை வழி நடத்தவும் ஏஜன்ஸிகள் அமைக்கப்படும்.

இலங்கையர் அல்லாதவர்களுக்கு நிலம் வழங்கப்படுவதோ விற்கப்படுவதோ சட்டபூர்வமாகத் தடை செய்யப்படும்.

இன்று முதல்
வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
★ ஜெய்சங்கர்
★ ஜெயலலிதா
★ நாகேஷ் ★ சுந்தரராஜன்
நடித்த
முத்துச் சிப்பி

இப்பொழுது திரையிடப்படுகிறது
வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)
எம்.ஜி.ஆர். ஜெயலலிதா
நாகேஷ் ரெங்கராவ்
மற்றும் பலர் நடிந்த




ராணி [யாழ்ப்பாணம்]
தினசரி 3 காட்சிகள்
ஷம்மி கபூர்—கல்பனா
நடித்த
புரொபசர்
(ஹிந்தி)

ராஜா (யாழ்ப்பாணம்)
Daily 4 Shows
Suspence! Thrilling! Action!
AGENT FOR H. A. R. M.
(colour)

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, 10-00
பிரிபோயா, போயா 2-30மணி
எம்.ஜி.ஆர். - பானுமதி
நடித்த
அலிபாபாவும்
40 திருடர்களும்
(கேவா கலர்)

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30-10-00 மணி
போயா, பிரிபோயா 2-30
சுந்தரராஜன்-சௌகார்ஜானகி
நடித்த
நாணல்

REGAL JAFFNA
Daily 4 Shows
PILGRIMAGE TO MECCA
மெக்கா யாத்திரை
(coluor)

MANOHAR
JAFFNA
Daily 4-45, 7&9-45 p.m.
Olive Reer - Diana Rigg
Curt Jurgens
in
THE ASSASSINATION BUREAU
(color)

1-6-70 முதல்
K.R விஜயா - ஜெய்சங்கர்
நடித்த
பெண்ணை வாழவிடுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளையன், வேலுப்பிள்ளை தோல்வி

### 70 . தெவிநுவர
மொத்த வாக்கு 44,112
ஜெனிடி பெல் 20,798
(ஸ்ரீ ல சு க)
பி பி விக்ரமசூரியா
(யு என் பி) 14,747
எச் பி டி வீரசிங்கா (சு) 263
மேலதிகம் 6,051

### 24 அவிசாவலை
மொத்தவாக்கு 46 402
பி ஜயசூரியா
ஸ்ரீ ல சு க) 19,688
பிலிப்குணவர்த்தன
(ம ஐ மு) 17,661
எஸ் பாதுக்க (சு) 2883
மேலதிகம் 3,026
(1965ல் ம ஐ மு பிலிப்குண வர்த்தன 11,327 அதிகப்படி வாக்குகளால் வெற்றி பெற்றார்)

### 43 செங்கடகல
மொத்தவாக்கு 25,780
என். விமலசேன
(யூ என் பி) 10,592
திருமதி ரத்வத்தை
(ஸ்ரீ சு க) 10,117
எம் பி சிறிவர்த்தன (சு) 68
மேலதிகம் 325
1965-ல் யு என் பி விமலசேன 3,370 அதிகப்படி வாக்குகளால் வெற்றிபெற்றார்)

### 26 . புலத்சிங்கள
மொத்தவாக்குகள் 33,800
மங்களமுனசிங்க (ல ச ச க 18916
எஸ் ரி எஸ் ரணசிங்க
(சு) 8121
திஸ லியனகே 2031
(ம ஐ மு)
சிறிபாலஹெட்டியாராச்சி
(சு) 131
மேலதிகம் 10795
1965ல் (ல ச ச க) மங்கள முனசிங்க 3690 அதிகப்படிவாக்குகளால் வெற்றி பெற்றார்)

### 52 கொத்மலை
மொத்தவாக்கு 25,903
ஜே டி வீரசேகரா
(ஸ்ரீ ல சு க) 11,936
டி பி ரணதுங்க
யு என் பி 10,768
ஓ எம் விஜேவர்த்தன
[சு] 235
1965ல் யு என் பி, டி பி ரணதுங்கா 1967 அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெற்றார்.

### 49 ஹேவாகெட்ட
மொத்த வாக்கு: 26,489
பியசேன தென்னக்கூன்
[ஸ்ரீ ல சு க] 18,071
எம். ஏ. டானியல்
[யு. என். பி ] 10,454
மேலதிகம்: 2,617
1965ல் யு என் பி திரு: எம். ஏ. டானியல் 1403 அதிகப்படி வாக்குகளால் வெற்றிபெற்றார்.

### 68 கம்புறுபிட்டிய
மொத்த வாக்கு: 40,548

### 122 பசறை
மொத்த வாக்குகள்: 16.461
செனிவரத்ன சோமபால
(ஸ்ரீ ல சு க) 8,382
திருமதி விவியன் பீரிஸ்
(யு என் பி) 5,798
பி எஸ் பெர்னாண்டோ
(சுயேச்சை 176
ஆர். குமாரவேல் 114
[1965ல் யு என். பி. திருமதி வ்எ. பீரிஸ் 328வாக்குகளால் வெற்றிபெற்றார்)

### 109 குருநாகல்
மொத்தவாக்குகள்: 36.663
எல் பி விஜயசிங்கா 16,672
(ஸ்ரீ ல சு க)
டி பி.வெலகெதர 14,008
(யு. என். பி )
ஆர். எம் பி. ஆர். எல். ஹெலகத்துகொட
[சுயேச்சை] 94
மேலதிகம்: 2664
(1965ல் யு என் பி திரு. டி. பி. வெலகெதர 2 385 அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெற்றார்.

### 117 கெக்கிராவ
மொத்த வாக்கு: 20.761
ஏ. எம். ஜினிதா
[ஸ்ரீ ல சு க[ 9 328
எஸ். பி லெனுவ
[யு. என் பி] 7,312
ஆர். டி. பி. ஜயசுந்தரா
[சுயேச்சை] 750
ஏ எம். ரி. எக்கநாயக்கா
[சுயேச்சை] 410
1959ல் எல்.பி.பி லெனுவ 823 அதிகப்படி வாக்குகளால் வெற்றிபெற்றார்.

### 128 அப்புத்தளை
மொத்த வாக்கு: 17 821
டபிள்யு பி ஜி. ஆரியதாசா
[ஸ்ரீ ல சு க] 8 339
மொண்டேகு ஜயவிக்கிரமா
[யு என். பி] 6896
மேலதிகம் 1443
1965ல் ஸ்ரீ ல சு கட்சி திரு, டபிள்யு. பி. ஜி. ஆரியதாசா 1 079 அதிகப்படி வாக்குகளால் வெற்றிபெற்றார்.

### 131, கலிகமுவ
மொத்தவாக்குகள் 34,407
பி பி பாலசூரியா 17,370
(ஸ்ரீ ல சு க)
திருமதி விமலா கன்னங்கரா 12,702
பி. ஆர். நவரத்தின (சு) 297
மேலதிகம் 4,668
(1965-ல் யு. என். பி. திருமதி விமலா கன்னங்கரா 1687 அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெற்றார்)

### 44 கலவான

### 34 லக்கல
மொத்தவாக்குகள் 17 961
எம் ஜி. கோவ்லாவ
(ஸ்ரீ ல. சு ) 9.166
பி. ஜி. முத்துபண்டா
(யு என். பி ) 5 892
கே. எம் கே பண்டா 4 654
ஆர். வி. ஜேக்கூன் 160
மேலதிகம் 3,274

### 31 மத்துகம
மொத்த வாக்கு: 46,966
தயாசேன பஸ்குவல்
(ஸ்ரீ. சு க) 24,718
ஆர் விஜேகுணரத்தின
(ம ஐ மு.) 13,998
மேலதிகம்; 10720

### 27 பண்டாரஹம
மொத்த வாக்கு: 44, 391
எச். விக்கிரமசிங்க
(ஸ்ரீ. ல சு ) 20,532
டி.சி டபிள்யூ. கன்னங்கரா
(யு என். பி) 15,592
பி. ஆர். ண தாசா
மேலதிகம்: 5,060

### 102 சிலாபம்
மொத்த வாக்கு: 49,184
எஸ். டி. ஆர். ஜயரட்ன
(ஸ்ரீ. ல. க 23 203
ஷேர்லி கொரியா
(யு என். பி) 18,419
மேலதிக: 4784

### 73 திஸ்ஸமகாராம
மொத்தவாக்கு: 51,500
ரி எதிரிசூரியா
(ஸ்ரீலங்கா சுதந்திர) - 18,576
எல் ராஜபக்ச (சு)- 13,121
சாள்ஸ் எதிர்சூரியா
(யு என்.பி.) - 5,919
எம். ஆர்.தாசிம் சு)-2 733
ரி. குணசேகரா (சு) - 2,269
என். ஆர். ஒபேவர்தன
(சு) - 169
(1965ல் ஸ்ரீ சு. கட்சி சாள்ஸ் எதிர்சூரியா 236 அதிகப்படி வாக்குகளால் வெற்றிபெற்றார்)

### 110 மாவத்தஹம
மொத்த வாக்கு: 32,562
டி. பி. விக்கிரமசிங்கா
(ஸ்ரீ ல. சு க.) - 16,608
எச். எக்கநாயகா(யு.என் பி -12,112
மேலதிகம் : 4496
(1965-ல் யு. என்.பி. எக்கநாயகா 580 அதிகப்படி வாக்குகளால் வெற்றிபெற்றார்.)

### 123 பதுளை
மொத்த வாக்கு: 25,411
பி. எச். பண்டார
(ஸ்ரீ சு. கட்சி) - 12,288
ஜே. ஹென்னநாயகா
(யு. என்.பி. ) - 8,70
மேலதிகம் : 3.588
(ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி

### 14 மகாரை
மொத்த வாக்கு:' 51 463
எஸ். கே. கே சூரியாராச்சி
(ஸ்ரீ ல. சு. க - 27,679
ரூடர் குணசேகர (ஐ தே ) 16,883
மொத்தம் : 10,796
[1965 ல் சூரியாராச்சி 4908மேலதிக வாக்குகளால் வெற்றிபெற்றார்]

### 105 கட்டுகம்பல
மொத்தவாக்குகள்: 40.370
சுபசிங்க 20,497
(ஸ்ரீ ல சு க)
லீலானந்த வீரசிங்க 14,672
(ஐ தே க)
கேபி தர்மதாசா 413
(சுயேச்சை)
(மேலதிகவாக்குள் 5825
1965ல் ல சு க சுபசிங்க பெற்ற மேலதிக வாக்குகள் 3345

### 47 வலப்பனை
மொ தவாக்கு: 24,591
ரி பி எம் ஹேரத்
(ஸ்ரீ ல சு. ச)
ஆர் எஸ் இராமநாயகா
[ஐ தே க) 9107
மேலதிகம்; 3484
(1965ல் ஸ்ரீ சு க ஹேரத் 770 அதிகப்படி வாக்குளால் வெற்றி பெற்றார்)

### 39 கலகெதர
மொத்தவாக்கு 26702
தாமரகுமாரி இலங்கரத்தின 13,211 (ஸ்ரீ சு க(
டபிள்யு எம் ஜி ரி பண்டா
(யு என் பி) 10,651
மேலதிகம்: 2560

### 104 வென்னப்புவ
மொத்தவாக்கு: 39,522
ஏ பொன்சேகா 19,073
ஸ்ரீ சு க)
பெஸ்ரஸ் பெரேரா
(யு என் பி) 15731
மேலதிகம்: 3342

### 120 மஹியங்கனை
மொத்தவாக்கு: 26,811
எட்வின் விக்ரமரத்தின
(ஸ்ரீ சு க) -11,886
சி பி ஜே செனிவரத்தின
(யு என் பி) 9330
ஜி இரத்னநாயக்கா 219
மேலதிகம்;2556

### 139 இரத்தினபுரி
மொத்த வாக்கு 42,004
நந்தா எல்லாவெல 22,633
ஸ்ரீ ல சு கட்சி
பி பி விஜேசுந்தர 12,002
யு என் பி
தர்மதாசா 190
மேலதிகம்
கே ரி மனிஸ்சிங்கோ 159
சுயேச்சை

### 97 நிக்கரவெட்டிய
மொத்தவாக்குகள்: 54634
முதியான்ஸே தென்னக்கூன் [சுயேச்சை]
எச். பி வன்னிநாயக்க 17, 891 (யு என் பி]
எம். பண்டிதகோரளே 1631
கே டி அல்பேட் [சு] 755
கே ஹேராத் [சு] 652
ஓ. என். வந்துரசல ]சு] 612
மேலதிகம்: 6272

### 111தொடங்கஸ்லந்தை
மொத்தவாக்கு·35,891
எஸ் விஜேவர்த்தன
[ஸ்ரீ ல சு க] 16,991
எஸ் டபிள்யு. அலவத்துவெல
[ஐ தே க] 14.818
சி. ஏ. மத்யூ [சு] 383
மேலதிகம்: 3,173
[1965-ல் யு என் பி திரு ராஜபக்ஸ 1,062 அதிகப்படி வாக்குகளால் வெற்றி பெற்றார்.

### 44 குண்டசாலை
மொத்த வாக்குகள்:
யு.பி வை. ஜினதாசா
]ஸ்ரீ ல சு] 13,317
ஆர் பி வ் ஜயசிறி
[யு என் பி] 11,208
லயனஸ் குணதுங்க
[சு] 116
மேலதிகம்: 2,109
(1965-ல் யு. என்.பி திரு. ஆர் பி. விஜயசிறி 983 அதிகப்படிவாக்குகளால் வெற்றி பெற்றார்

### 45 தெல்தெனியா
மொத்தவாக்குகள்: 21,797
ராஜாகுலதிலகா
[ஸ்ரீ ல சு க] 11,457
திஸாகப்பு கொட்டுவ
[ஐ தே க ] 8,038
கே.பிரம்புக்வெல
[சி.ம.ப] 176
பெரும்பான்மை: 3419

### 65 அக்குரஸ்ஸ
மொத்தவாக்கு:40,078
எஸ் ஏ. விக்கிரமசிங்கா
[கம்யூனிஸ்ட்] 20 007
வி.பி.ஏ. அபயசிங்கா
[யு.என் பி] 14,461
மேலதிகம்! 5541
1965-ல் கம்யூனிஸ்ட் எஸ் ஏ. விக்கிரமசிங்கா 2974 அதிகப்படி வாக்குகளால் வெற்றுபெற்றார்.

### 30 பேருவலை
மொத்தவாக்கு:47.987
ஐ ஏ அப்துல்காதர்
[ஸ்ரீ ல சு க] 22 036
பாக்மீர் மாக்கார்
[யு என் பி] 19.096
டி எப் கல்ஹென
[சு] 274
மேலதிகம்: 3940
1965-ல் யு என் பி பாக்கீர் மாக்கார் 1741 அதிகப்

### 5 வத்தளை
மொத்த வாக்காளர் 48875
ஏ டி. ஜே எல லியோ
ஸ்ரீ ல சு க 21856
ஷெல்டன் ஜெயசிங்கா
(யு என் பி] 19,667
மேலதிகம் 2,189
1965-ல் யு என்.பி ஷெல்டன் ஜெயசிங்கா 3,573 அதிகப்படி வாக்குகளால் வெற்றி பெற்றார்.

### 21 ஹோமகம
மொத்தவாக்காளர் 47 270
விபிற சேனநாயகா
(ல ச ச க] 24.730
காமினி ஜயசூரிய
(யு என் பி] 17471
எம் சோம பால 320
மேலதிகம 7289
1965ல் யு என் பி யைச் எம் எஸ் ஆலுத்கமகே சேர்ந்தகாமினி 1952-ல் பெற்றவாக்கு.

### 60 ரத்கம
மொத்த வாக்காளர் 43 436
எம், ஜி மெண்டிஸ்
கம்யூனிஸ்ட் 24,644
எட்வின் திலகரத்ன
[யு என் பி) 13,017
எச். கொடகே
[சு] 152
எச் கே ராஜபக்ச 120
மேலதிகம் 11,627

### 32 அகலவத்தை
மொத்தவாக்குகள் 41,367
கொல்வின் ஆர், டி. சில்வா
[ல ச ச க] 25164
ஜி டி. மகிந்தசோமா 19,978
ஏ. டி. பி கருணதிலக 154
மேலதிகம் 5186

### 9 மீரிகம
மொத்தவாக்கு: 57,721
திருமதி சிவா ஒபயசேகரா
(ஸ்ரீ ல சு க) 23,772
டபிள்யூ எஸ்.கருணரத்ன
(யு என் பி) 19,549
மேலதிகம்: 5,323

### 75 பலப்பிட்டிய
மொத்தவாக்கு: 45,862
டபிள்யூ.பி.டி.சில்வா
(ல ச ச க) 2,265
ஆர்.டி.சில்வா
(யு என் பி) 14,431
ஈ.எம்.விஜேராம
(சு) 951
ஜே முனசிங்க
(சு) 169
மேலதிகம்: 8728

### 71 பெலியத்த
மொத்தவாக்குகள் 46,342
எம்.ராஜபக்ஷ
(ஸ்ரீ ல சு க 23,103
பி.கே. ஆ. அத்தபத்து
(யு என் பி) 16,477
ஆர்.ஜி டபிள்யு. நிலாவீர
(சு) 678
மேலதிகம் 6.626

### 85 மன்னார்
மொத்தவாக்குகள் 25,441
வி ஏ. அழகக்கோன்
தமிழரசு 10,697
எஸ் ஏ. றகீம்
(ஐ தே க) 10628
என் எம் அப்துல்காதர்
(ஸ்ரீ ல சு க) 513
மேலதிகம் 69

### 141 பலாங்கொடை
மொத்தவாக்கு: 34,715
திருமதி மல்லிகாரத்வத்தை
(ஸ்ரீ. ல க ) 18.808
திருமதி சீதா செனிவரத்தின
(யு என் பி 11,619
திருமதி எஸ் ஸ்ரீகாந்தம் 225
பி. நெல்கொடி (சு) 176
மேலதிகம் 7,189

### 96 புத்தளம்
மொத்தவாக்கு: 29,858
எஸ் எம். அசன்குத்தூஸ்
(ஸ்ரீ. ல, க.) 10,995
எம். எச் எம்நயீனமரிக்கார்
(யு என் பி) 10,892
ரி டி ஓசஸ்தின் (சு 2,209
சி சரவணமுத்து (சு) 131
மேலதிக: 103

### 64 மாத்தறை
மொத்தவாக்கு: 41,751
பி. வை துடாவை
(கம்யூனிஸ்ட்) 20,764
எஸ் கே பியதாச
(யு. என். பி ) 14,580
ஈ. பி. விஜேதுல்க சு) 160
மேலதிகம் 6,189
1965 கம்யூனிஸ்ட் பி. வை துடாவை 920 அதிகப்படி வாக்கால்வெற்றி பெற்றார்.

### 134 மாவனல்ல
மொத்தவாக்கு. 38,938
பி. ஆர். இரத்னநாயக்கா
(ஸ்ரீ ல. க) 19,242
சீ ஆர் பெலிகம்ன 14.504
எம் ஐ எம் மல்ஜீட்(சு)475
மேலதிகம் 4,738

### 123 பதுளை
மொத்தவாக்கு 25,411
பி ஏச் பண்டார
(ஸ்ரீ ல சு க) 12,288
ஜே ஹென்ன நாயக்கா
(யு என் பி) 8,700
மேலதிகம் 3588

### 106 குளியாப்பிட்டி
மொத்தவாக்குள்; 42,974
ஜி டபிள்யூ சமரசிங்கா
ஸ்ரீ ல சு க) 19,963
ஐ எம் ஆர் ஏ இரிய கொல்லை [ஐ தே க)18,055
மேலதிகம்: 1 908
(1965ல் ஐ தே கட்சியில் போட்டியிட்ட இரிய கொல்லை 2. 818 அதிகப்படி வாக்குளால் வெற்றிபெற்றார்)

### 103 நாத்தாண்டிய
மொத்தவாக்குகள்: 35496
பி திஸ்சேரா [ஸ்ரீ சு க) 16,437
ஸ்ரீ யூ பெர்னாண்டோ
(ஐ தே க 14,987
மேலதிகம்: 1450

### 34 லக்கல
மொத்த வாக்கு: 17 961
எம் சி கோபல்லவ
(சிறி சு ச) 9,166
கே. எம் கே பண்டா
சு) 5,892
பி ஜி முத்துபண்டா
(ஐ தே க) 4,654
ஆர் வி ஜேக்டன்
(சு) 160
மேலதிகம்: 32,74
